புது எழுத்து

9+



அஞ்சலி: ஒடிசி கலைஞர் குரு-கேளுசரண் மகாபாத்ரா

கைர்னீகா

பால் எல்வா

தமிழில்: ஆர்.சிவகுமார்



1.

நெருப்புக்கு உகந்த முகங்கள் பனிக்கு உகந்த முகங்கள்
மறுத்தல்களுக்கு இரவுக்கு வசவுகளுக்கு தாக்குதல்களுக்கு

எல்லாவற்றுக்கும் மிக உகந்த அம்முகங்கள்
உங்களை உற்று நோக்கும் வெறுமையைப் பார்க்கின்றன
இரக்கத்துக்குரிய முகங்கள் பலியிடப்பட்டன
உங்களின் மரணம் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழும்

மரணத்தின் இதயம் தலைகீழாக
ரொட்டிக்கு விலையாக உங்களின் உயிரைத் தர வைத்தார்கள்

சுவர்க்கத்துக்கு பூமிக்கு தண்ணீருக்கு தூக்கத்துக்கு விலையாக
உங்களின் உயிரைத் தர வைத்தார்கள்

கொடிய வறுமையும்கூட
அன்பான நடிகர்கள் மிக சோகத்துடன் ஆனாலும் மென்மையானவர்கள்
முடிவற்ற நாடகத்தின் நடிகர்கள்

நீங்கள் மரணத்தைப்பற்றி நினைத்ததில்லை

வாழவும் இறக்கவும் ஆன பயமும் துணிவும்
மரணம் மிகக் கடினமானது மிக எளிதானதும்கூட

2.

இரும்பும் நெருப்பும் கொண்டு
ஒரு சுரங்கத்தைப்போல தோண்டியெடுக்கப்பட்ட மனிதன்
கப்பல்களில்லாத துறைமுகத்தைப்போல தோண்டியெடுக்கபட்ட
கணப்படுப்பு இல்லாத இல்லத்தைப்போல
தோண்டியெடுக்கப்பட்ட மனிதன்

அதே புதையலான
வசந்தத்தின் பச்சை இலைகளும் தூய்மையான பாலும்
நெடிய கண்களும் கொண்ட பெண்களும் குழந்தைகளும்
அவர்களுடைய தூய்மையான கண்களில்
பெண்களும் குழந்தைகளும் அதே புதையலைக் கொண்டுள்ளார்கள்
அதை முழு முயற்சியுடன் பாதுகாக்கிறார்கள் ஆண்கள்

பெண்களும் குழந்தைகளும் கொண்டுள்ளார்கள் அதே புதையலை
கண்களில்
அதை முழுமுயற்சியுடன் பாதுகாக்கிறார்கள் ஆண்கள்
பெண்களும் குழந்தைகளும் அதே சிவப்பு ரோஜாக்களைக்
கொண்டுள்ளார்கள்
கண்களில்
ஒவ்வொருவனும் காட்டுகிறான் தன்னுடைய ரத்தத்தை

3.

இறுதியில்
ஓர் இழந்த பாவனையை மேற்கொள்கிறார்கள் குழந்தைகள்

ஆனந்த கண்ணீர்த்துளிகள் முன்பு இருந்தன என்று
தான் நேசிக்கும் பெண்ணை நோக்கி தன் கைகளை விரித்தான் என்று
குழந்தைகள் சிரித்தபடியே விம்மின என்று
நாம் நமது மிக எளிமையான கூற்றுக்குக் குறுக்கப்படப் போகிறோம்

இறந்தவர்களின் கண்கள் உச்ச இசையொலியின் அடர்த்தியைக்
கொண்டுள்ளன
இறந்தவர்களின் கண்கள் வயுண்ட நிலங்களின் நொய்ம்மையைக்
கொண்டுள்ளன.

பலியானவர்கள் தங்களின் கண்ணீரை
விஷமெனக் குடித்தார்கள்

4.

மனிதர்கள் மீது ரத்தம் விலங்கின் மீதும் ரத்தம்
அவர்கள் அளவில் தூய்மையான துப்பரவான
கொலையாளிகளை விட
அதிகம் நாறும் அதிகம்த குமட்டும் கொடிமுந்திரிப்பழம்
எல்லா கண்களும் குருடாக்கப்பட்டன எல்லா இதயங்களின்
துடிப்பும் அடக்கப்பட்டது
இறந்த ஒரு மனிதனைப்போல குளிர்ந்துள்ளது பூமி

5.

யாரைப் புகழ்ந்து இந்த புதையல் பாடப்பட்டதோ அவர்கள்
யாருக்காக இந்த புதையல் கெட்டழிக்கப்பட்டதோ அவர்கள்

ஸ்ரீநேசன் கவிதைகள்

உன்னிடம் உடனே வருவேன்
என் தங்கத் தனி மலையே

பனியால் மூழ்கி எழுங்கதிரின் கிரணங்கள் படர
தனித்துச் சுழல்கிறது பயணத்தினூடாக பார்க்குமந்த மலை
நேற்றிரவு அதன் பக்கப் பாறையின்
கீழ்தான் சிரம் வைத்துத் துயின்றிருந்தேன்
ரண சிகிச்சைக்கான வடுக்கள் தாங்கியிருந்த அது
கணத்துக்கு கணம் பேருரு கொள்வதாக தெரிகிறது
ஏதேதோ அரவங்கள் கொசுக்களின் ரீங்காரம்
இம்சிக்கும் அவ்விரவில்
அதன் அருகாமை பேரமைதி தருகிறது
முத்த நிலவொளியில்
மலையின் கடினத் தன்மை மெல்ல தளர
நெகிழும் அது மிருதுவாக
உள்ளே ஏதோ உயிர்ச்சலனம்
கால்களோ கைகளோ தலையோ
முட்டி என்னை ஸ்பரிசிக்கும் சிலிப்பு
உச்ச சிகரத்திலிருந்து கருணைமிக்க இரு கண்கள்
எனை நோக்க அங்கிருந்து நீளும்
ஒரு கிளைக் கரம் என்னை அரவணைக்கிறது
அது தன் கனிகளை நானுண்ணத்தருகிறது
ஒரே சமயம் உள்ளேயும் வெளியேயும்
இரு உயிர்களை பராமரிக்கும் சக்தியென நிற்கும்
ரகஸ்யத்தை அறிந்தவன்தான் அருகிருக்க முடியுமோ
இமைப்பு பல நடந்து முடிவதற்குள்
ஊற்றெனக் கண் திறந்த வெடிப்பின் வலியில்
மலை மெல்ல முனக
பாறைக்குள்ளிருந்து பிறந்திருந்தது அந்த காலை
பிரிந்து வந்தேனெனினும் திரும்ப வேண்டியவனாகி
உன்னிடம் வருவேன் உடனே
என் தங்கத் தனி மலையே.

நனைக்க இயலாத மழை

வெட்ட வெளியில் வசித்திருந்த நரிக்குறவர் கூட்டம்
பேச்சும் பாட்டும் நடனமுமாகக் கொண்டாடிக்
கொண்டிருந்தது அத்தினத்தை
உலகத்தின் ஆரம்ப மொழிகளில் ஒன்றாய்
இருக்க வேண்டிய அவர்களது பேச்சு
இன்னும் ஆதிநிலை அடைகிறது கிழவனின் போதையில்
அவன் பகிர்ந்த நாட்டுச் சாராயம்
குறக்கிழவி ஒருத்தியாகி
எக்காளமாய் நீட்டி உரத்துப் பாடுகிறது
கடவுள் உலகத்துக்கே
சமைக்க மூட்டிய அடுப்பருகே
குட்டிக்கரணம் போட்டுத் துள்ளும்
அம்மணக் குழந்தைக்கு நடுவே எங்கோ ஒலிக்கும்
பாட்டொன்றுக்கு நடனமாடுகிறாள் சிறுமி ஒருத்தி
அவள் சுழற்சியில் பூமி ஒரு கணம் ஸ்தம்பிக்கிறது
சருககள் உருண்டோடி திரள்கிறகருமேகம்
வானின் மாலையை கருக்குகிறது
உடன் பெருக்கிறது அடர் மழை
யாரும் கலைந்தோடா அப்பொழுதில்
சிறுமியின் நடனமாய்
தொடரத் தொடர்ந்து பின் ஓய்ந்து
நிற்கிறது மழை
இருந்தும்
எரிந்திருக்கும் அடுப்பும் அணைந்திருக்கவில்லை
அவர்களில் ஒருவரும் நனைந்திருக்கவில்லை



ஆல்பெர் காம்யு
வசந்த் செந்தில்
விலை ரூ.125
புதுமைப்பித்தன் வெளியிடு



வார்த்தைப்பாடு
அசதா சிறுகதைகள்
விலை ரூ.40
தமிழினி வெளியிடு



இடாலோ கால்வினோ
ஒன்று கலந்திடும் விதிகளின் கோட்டை
தமிழில் சா.தேவதாஸ்
விலை ரூ.50
வ.உ.சி நூலக வெளியீடு



காஃப்கா
கடிதங்கள், கதைகள், கட்டுரைகள்
தமிழில்: சா.தேவதாஸ்
விலை ரூ.75
வ.உ.சி நூலக வெளியீடு



யாசுனாரி கவாபட்டா
மூங்கில் இலைப் படகுகள்
தமிழில்: லதா ராமகிருஷ்ணன்
விலை ரூ.90

ஸ்நேகா வெளியீடு

மேற்கண்ட புத்தகங்கள் சென்னையில்...கிடைக்குமிடம்
நியூ புக்லேண்ட்ஸ் - தி.நகர், திலிப்குமார் - மந்தைவெளி

ஆசிரியர்: மனோன்மணி - புது எழுத்து - தனிச்சுற்றுக்கு மட்டும்